**மதுக்கரை நகராட்சியில் 31.03.2023ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

**நகர்மன்றக் கூட்ட நாள்.13.01.2023ல் தீர்மானம் எண்.110ன்படி ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.8/2ல் 1.28 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி. ரீத்தாதேவி மற்றும் திரு. ஜோசப் ஜெயசிங் ஆகியோருக்கு திட்ட அனுமதி எண்.505/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 429/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.9920/2022 நாள்.28.11.2022ன்படி 1688.78 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 19.05 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2239/2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.124**

அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.02**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 120ன்படி மதுக்கரை நகராட்சிக்கான 2022–2023ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத்திட்டம் (Budget Estimate) மற்றும் 2023–2024ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்:568/2023/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றத்தில் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.125**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

## மன்றப் பொருள் எண்.03

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மதுக்கரை நகராட்சியில் கூடுதலாக ஒரு அரசு நடுநிலைப்பள்ளியில் பயிலும் 222 மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்க அனுமதிக்கப்பட்டதன்படி ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடம் மையத்திலிருந்து காலை சிற்றுண்டி தயார் செய்து வழங்குவதற்காக திறந்த ஒப்பந்தபுள்ளிகள் 06.02.2023ம் நாளில் கோரியதில் கீழ்காணும் விபரத்திற்கு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாணவர்களுக்கு உணவு வழங்கசெலவு ரூபாய் |
|---|---|---|
| 1 | No Food Waste<br>No.4,1st street<br>Kothari Layout<br>Singanallur, Coimbatore. | ரூ.12.65 பைசா |
| 2 | SKP Enterprises<br>44/22, Archanari street<br>Samynathapuram<br>Salem. | ரூ.15.75 பைசா |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் No Food Waste, கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 809/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு 01.03.2023 நாள் முதல் காலை உணவு வழங்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 13.02.2023ம் நாளில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.126**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## மன்றப் பொருள் எண்.04

அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை நாள்.23.01.2023ன்படி பேரூராட்சியாக இருந்து தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை நகராட்சியின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்திற்கு முறைப்படுத்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.195/2023/அ1).

**நகராட்சி பணியிடங்கள் தோற்றுவித்தல், வரையரைகள் நிர்ணயம் செய்ததன் அட்டவணை**

| வ.எண் | பிரிவு விபரம் | பதவியின் பெயர் | அனுமதிக் கப்பட்டது | தற்போது உள்ளது | புதிய பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பொதுப்பிரிவு | மேலாளர் (வகுப்பு IV) | 1 | 0 | 1 | |
| 2 | | கணக்கர் (வகுப்பு V) | 1 | 0 | 1 | |
| 3 | | வருவாய் ஆய்வர் (வகுப்பு V) | 1 | 0 | 1 | |
| 4 | | உதவியாளர் | 1 | 0 | 1 | |
| 5 | | இளநிலை உதவியாளர் | 5 | 2 | 3 | |
| 6 | | தட்டச்சர் | 1 | 0 | 1 | |
| 7 | | வருவாய் உதவியாளர் | 3 | 3 | 0 | |
| 8 | | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 | |
| 9 | | அலுவலக உதவியாளர் | 3 | 1 | 2 | |
| | | மொத்தம் | 17 | 7 | 10 | |
| 1 | பொறியாளர் பிரிவு | நகராட்சி பொறியாளர் நிலை III/ இளநிலை பொறியாளர்/ உதவிப்பொறியாளர் | 1 | 0 | 1 | |
| 2 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 0 | 1 | |
| 3 | | படவரைவாளர் (நிலை-III) | 1 | 0 | 1 | |
| 4 | | பணி ஆய்வர் | 2 | 0 | 2 | |
| 5 | | மின் பணியாளர் (நிலை -II) | 1 | 0 | 1 | |
| 6 | | குழாய் பொருத்துனர் (நிலை -II) | 1 | 0 | 1 | |
| | | மொத்தம் | 7 | 0 | 7 | |
| 1 | நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு ஆய்வர் (Town Planning Inspector) | 1 | 0 | 1 | |
| | | மொத்தம் | 1 | 0 | 1 | |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு ஆய்வர் | 1 | 0 | 1 | |
| 2 | | துப்புரவு பணி மேற்பார்வைய்ாளர் | 4 | 3 | 1 | |
| 3 | | களப்பணி உதவியாளர் | 1 | 0 | 1 | |
| | | | 6 | 3 | 3 | |
| | | ஆக மொத்தம் | 31 | 10 | 21 | |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.127**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.05**

மதுக்கரை நகராட்சி மன்றத்தலைவர் அவர்களின் 20.03.2023ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் எதிர்வரும் வறட்சியை சமாளிப்பதற்கும் பொது மக்களின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு கீழ்காணும் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் விநியோகம் செய்து கொடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

| வரிசை எண் | வார்டு எண். | ஆழ்துளை கிணறு அமைக்கப்படவுள்ள பகுதிகள் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 5 | மலைச்சாமி கோவில் பகுதி | 5.00 |
| 2 | 7 | குரும்பபாளையம் பகுதி | 5.00 |
| 3 | 10 | சென்னை சில்க்ஸ் பகுதி | 5.00 |
| 4 | 20 | ஓம் பராசக்தி நகர் பகுதி | 5.00 |
| 5 | 24 | மேட்டாங்காடு பகுதி | 5.00 |
| 6 | 25 | பாலத்துறை ரோடு பகுதி | 5.00 |
| 7 | 27 | மாகாளியம்மன் கோவில் பகுதி | 5.00 |
| | | மொத்தம் | 35.00 |

மேற்காணும் விபரத்திற்கு ஏழு பகுதிகளில் நீரோட்டமுள்ள இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.35.00 லட்சத்தினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். /2023/அ1)

**அலுவலக குறிப்பு**

ஒப்பந்தப்புள்ளி விதிகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.128**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.06**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31117/2021/CFC நாள்.21.09.2022ன்படி 15வது நிதிக்குழு மான்யம் Tied grant 2021–2022ன் கீழ் ரூ.26.44 லட்சம் மதிப்பீட்டில் மதுக்கரை நகராட்சியில் நுண் உரக்கிடங்கில் 5 TPD கொள்ளளவு கொண்ட 14 டப்கள் கட்டுதல் மற்றும் மின்கல வாகனத்திற்கு ஷெட் கட்டும் பணிக்கு கடந்த 11.01.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ரத்தினவேலுசாமி<br>273 அய்யப்பன் கோவில் வீதி,<br>பாலக்காடு ரோடு,<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.25,84,495/– | –0.14% குறைவு |
| 2 | திரு. கே.பி. சின்னராஜ்<br>5/1106 குப்பனூர் உயர்நிலை பள்ளி பின்புறம், கோயம்புத்தூர். | ரூ.27,00,937/– | 4.36% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். ரத்தினவேலுசாமி என்பவரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை 15வது நிதிக்குழு மான்யம் Tied grant நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1588/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பொதுமக்களுக்காக திட்டப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று திரு. எஸ். ரத்தினவேலுசாமி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.129</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.07**

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.15, நாள். 31.03.2022ன் படி மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தலைவர் அறையை சீர்அமைக்கும் பணிக்கு ரூ.4.00 லட்சம் செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு 20.01.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பிட்டைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>15/156 சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.3,98,400/– | –0.02% குறைவு |
| 2 | திரு. எம். மகேந்திரன்<br>9/343H, சூட்டிங் ரேஞ்ச் ரோடு,<br>காந்தி நகர், மதுக்கரை | ரூ.4,05,049/– | 1.65% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ் நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 08/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.130**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.08**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20860/2022/SBM நாள்.05.12.2022ன்படி SBM 2.O திட்டத்தின் கீழ் ரூ.34.50 லட்சம் மதிப்பீட்டில் மதுக்கரை நகராட்சியில் நுண் உரக்கிடங்கு MCC செயலாக்க மையம் 3 TPD கட்டடம் கட்டும் பணிக்கு கடந்த 25.01.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ரத்தினவேலுசாமி<br>273 அய்யப்பன் கோவில் வீதி,<br>பாலக்காடு ரோடு,<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.32,20,210/– | –0.10% குறைவு |
| 2 | திரு. கே.பி. சின்னராஜ்<br>5/1106 குப்பனூர் உயர்நிலை பள்ளி<br>பின்புறம், கோயம்புத்தூர். | ரூ.34,80,024/– | 7.96% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். ரத்தினவேலுசாமி என்பவரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை SBM 2.O நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1962/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பொதுமக்களுக்காக திட்டப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று திரு. எஸ். ரத்தினவேலுசாமி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.131</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.09**

மதுக்கரை நகராட்சியில் 2022–2023 நிதியாண்டு முடிவடைவதால் பொதுமக்கள் நகராட்சிக்குச் செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் கடை வாடகை உள்ளிட்ட நிலுவையினங்களை நகராட்சிக்கு செலுத்தக்கோரி நகர் முழுவதும் ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் 14.02.2023 வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் (திருவாளர்கள்) | ஒரு நாள் வாடகை |
|---|---|---|
| 1 | புவனேஸ்வரி சவுண்ட் சர்வீஸ் குரும்பபாளையம், மதுக்கரை | ரூ.3300/– |
| 2 | மாதா சவுண்ட் சர்வீஸ் காந்தி நகர், மதுக்கரை | ரூ.3500/– |
| 3 | கோகுல் சவுண்ட் சர்வீஸ் மதுக்கரை | ரூ.3800/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள புவனேஸ்வரி சவுண்ட் சர்வீஸ் நிறுவனத்தாரின் விலைவிகிதத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.      /2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.132</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.3473/2021/பி1 நாள்.14.11.2022ன்படி நமக்கு நாமே திட்டம் 2022—2023ன் கீழ் ரூ.27.30 லட்சம் மதிப்பீட்டில் மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு சுந்தராபுரம் ரோடு ராஜாமணி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றி அமைக்கும் வேலை மற்றும் வார்டு எண்.23 தர்மராஜா நகர் மெயின் சாலை மற்றும் 1வது குறுக்கு சாலை மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு கடந்த 08.03.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>15/156 சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.25,82,919/— | —0.27% குறைவு |
| 2 | தி/வா. மல்லையன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ்<br>16/173பி பாலக்காடு மெயின் ரோடு,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.26,97,657/— | 4.16% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ் நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1791/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பொதுமக்களுக்காக திட்டப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.133</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.11**

மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1/227312/2023 நாள்.21.02.2023ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் கீழ் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு மலைசாமி கோவில் தெரு நியாய விலை கடை முதல் மயிலாத்தாள் வீடு வரையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு கடந்த 16.03.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. மல்லையன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ்<br>16/173பி பாலக்காடு மெயின் ரோடு,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.9,49,017/– | –0.11% குறைவு |
| 2 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>15/156 சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.9,55,385/– | 0.56% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. மல்லையன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ் நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023 நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:2079/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பொதுமக்களுக்காக திட்டப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தி/வா. மல்லையன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.134**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.12**

இந்நகராட்சியின் உழுவை ஓட்டுநர் திரு. எம். திருமலைசாமி அவர்களின் 27.01.2023ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN37AQ3055 டிராக்டர் வாகனத்திற்கு இன்ஜின் பழுதடைந்துள்ளதால் இவற்றை உடனே சரிசெய்ய வேண்டுமென

அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன சர்வீஸ் பணிகளுக்கு 14.02.2023ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளி விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | தி/வா. என். மகாலிங்கம் அன்ட் கம்பெனி<br>68 டாக்டர் நஞ்சப்பா ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.114539/– |

மேற்கண்ட விபரத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான தி/வா. என். மகாலிங்கம் அன்ட் கம்பெனி, கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0175 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைதாரார் திருவாளர். என். மகாலிங்கம் அன்ட் கம்பெனி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.135**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.13**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகன ஓட்டுநர் திரு. வி. விமல்குமார் என்பவரின் 27.01.2023ம் நாளிட்ட கடிதத்தில் இந்நகராட்சி டிராக்டர் டிரைலர் வண்டி TN37Q6934 வாகனத்திற்கு 13.02.2023ம் நாளுடன் தகுதிக்காலம் முடிந்து விட்டதாகவும், இவ்வாகனத்திற்கு 14.02.2023ம் நாள் முதல் தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிக்கை செய்துள்ளார்.

மேற்காணும் விபரத்திற்கு நகராட்சி டிராக்டர் டிரைலர் வாகனத்திற்கு போக்குவரத்துத் துறையில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் உள்ள அனைத்து பழுதுகளை சரிசெய்து உரிய கட்டணங்களையும் செலுத்துவதற்கு கடந்த 10.02.2023ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் ரூபாய் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை, கோயம்புத்தூர்–641105. | ரூ.99970/– |
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர்–641105. | ரூ.106805/– |

| | | |
|---|---|---|
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர்–641105. | ரூ.108374/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0174 /2023/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினத்தை மேற்கொண்டதற்கும் மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.136**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.14**

மதுக்கரை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தர கோரி கீழ்காணும் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | விண்ணப்பித்த நாள் | சால்வன்சி மதிப்பு ரூபாய் | ஒப்பந்ததாரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர். பழனிமுத்து<br>15/156B சரஸ்வதி நகர்<br>மரப்பாலம், மதுக்கரை,<br>கோயம்புத்தூர்–641105 | 07.02.2023 | ரூ.1000000/– | வகுப்பு-IV |

அரசாணை நிலை எண்.37, பொதுப்பணிகள் (ஜி2) துறை நாள்.17.06.2022ன்படியும், மேற்கண்ட விண்ணபத்தினை நகராட்சி ஒப்பந்தப்பதிவு விதிகளுக்கு உட்பட்டு நகராட்சி ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0244/2023/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.137**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.15**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.109/1B, 110/1Bல் 1.00 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி. A. மோகனா மற்றும் P. ரேவதி என்பவருக்கு திட்ட அனுமதி எண்.272/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 227/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.4081/2022 மற்றும் 4082/2022 நாள்.25.05.2022ன்படி 1455.08 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 23.55 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு 24.00 சதுர மீட்டர் இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.609/2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.138**

அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.16**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் செயலாட்சி அதிகாரியின் நெருக்கடி கால அதிகாரங்களின்படி அவசர அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வேலை விபரப்பட்டியல்கள்.

| வரிசை. எண் | அவசர அவசிய பொது வேலைகள் விபரம் | செலவினத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 ஐயப்பன் கோவில் வீதி பகுதியில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றி புதிதாக கால்வாய் அமைத்த வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.42396/– |
| 2 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 24வது வார்டு தனலட்சுமி கல்யாண மண்டபம் அருகில் நீர் மின்மோட்டார் ரூம் பாக்ஸ் பழுதடைந்து உள்ளதை மாற்றி புதிய ஷீட், ஆங்கிள் வாங்கி பணி செய்த வகையில் ஆட்கூலி உட்பட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.28540/– |

| | | |
|---|---|---|
| 3 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 19வது வார்டு தர்மலிங்கேஸ்வரர் கோவில் வீதி பகுதியில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதை அகற்றி புதிதாக கால்வாய் பணி செய்த வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.18850/– |
| 4 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு தண்டபாணி தோட்டம் செல்லும் வழியில் கழிவுநீர் கால்வாய் பழுது அடைந்திருந்ததால் பொதுமக்கள் நலன் கருதி பழுதான பகுதியை அகற்றிவிட்டு புதிய கால்வாய் அமைத்து கொடுத்ததற்கு செலவினம் மேற்கொண்டது. | ரூ.7300/– |
| 5 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு மெகா சிட்டி பகுதியில் குடிநீர் சரிவர செல்லாமல் பொதுமக்கள் சிரமப்பட்டு வருவதால் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு அப்பகுதியில் சீராக குடிநீர் செல்லும் பொருட்டு சுந்தராபுரம் மெயின் ரோடு பெட்ரோல் பங்க் எதிர்புறம் பூஸ்டர் மோட்டார் வைக்க 5 அடி நீளம் மற்றும் அகலத்தில் தரை அமைத்து கொடுத்ததற்கு கூலி உள்பட செலவினங்கள் மேற்கொண்டது. | ரூ.15840/– |
| 6 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 24வது வார்டு மேட்டாங்காடு தனலட்சுமி கல்யாண மண்டபம் அருகில் பழுதடைந்த கழிவுநீர் கால்வாய் அகற்றிவிட்டு புதிதாக கழிவுநீர் கால்வாய் அமைத்து கொடுத்ததற்கு கூலித்தொகை உட்பட செலவினம் மேற்கொண்டது. | ரூ.49302/– |
| 7 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 27வது வார்டு முனியப்பன் கோவில் வீதியில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் அவசர அவசிய தேவையை கருத்தில் கொண்டு கழிவுநீர் கால்வாய் சரிசெய்யும் பணிகள் செய்த வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொண்டது. | ரூ.11000/– |
| 8 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 7வது வார்டு நேரு வீதி ரேசன் கடை அருகில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால், அப்பகுதியில் பொதுமக்கள் நலன் கருதி கழிவுநீர் கால்வாய் சரிசெய்யும் பணிகள் செய்த வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொண்டது. | ரூ.8525/– |
| 9 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 7வது வார்டு கலைஞர் வீதியில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் அவசர தேவையை கருத்தில் கொண்டு கழிவுநீர் கால்வாய் சரிசெய்து கொடுத்த வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொண்டது. | ரூ.5055/– |
| 10 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 8வது வார்டு ராமண்ண தோட்டம் கடைசி தெரு பகுதியில் கழிவுநீர் செல்லாமல் பொதுமக்கள் சிரமப்பட்டு வந்தனர். பொதுமக்களின் அவசர தேவையும், பொதுசுகாதார நலன் கருதியும் கழிவுநீர் கடத்துவதற்கு பைப்லைன் பொருத்தி சரிசெய்து கொடுத்ததற்கான செலவினம் மேற்கொண்டது. | ரூ.16300/– |
| 11 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 17வது வார்டு விநாயகர் கோவில் வீதி பகுதியில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்து, கழிவுநீர் சாலையில் சென்று பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டதால், பொதுமக்களின் நலன் கருதி விநாயகர் கோவில் வீதியில் இரண்டு இடங்களில் கழிவுநீர் வடிகால் சரிசெய்து கொடுத்ததற்கான செலவினம் மேற்கொண்டது. | ரூ.21750/– |

பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட விபரத்திற்கான அவசர அவசியப் பணிகளை உடனடியாக செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்தமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.877/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.139</u>**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 31.03.2023

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி